# அப்பன் அவதரித்த

**ராகம் கரஹரப்ரிய**

**ஆதி தாளம்**

**(ஸ்ரீ பாபநாசம் சிவன் இயற்றியது)**

*பல்லவி*

*அப்பன் அவதரித்த கதாம்ருதம் இவ்*
*வகிலம் உய்ய விளைந்த அத்புதம் (ஐய்)*

*அனுபல்லவி*

*முப்புவனங்களை வாட்டும் மஹிஷ முகி*
*முதலரக்கர் கருவறுத்து வரும் (ஐய்)*

*சரணம்*

*மோஹினி வடிவு கொள் மலர்க் கண்ணன் அழகில்*
*மோஹம் கொண்டு கலந்தான் முக்கண்ணன் த்ரி*
*லோக மங்களகர மூர்த்தி மணிகண்டன்*
*உயர் திரு சாஸ்தா என்னும் பெயரொடும் (ஐய்)*

✠✠✠✠✠✠✠✠✠✠✠